Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**நீர்வளத்துறை**

அனுப்புநர்
**பொறி.M.இளங்கோ,எம்.இ.,**
செயற்பொறியாளர், நீ.வ.து,
காவிரி வடிநில கோட்டம்,
தஞ்சாவூர்.

பெறுநர்
**உதவி இயக்குநர்,**
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.5 கணபதி நகர் 2-ஆம் தெரு,
மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர் – 613007.

**கடித எண். 550 /இ.வ.அ.2/ கோ.15/ 2024/NOC/ நாள்: 2 .07.2024.**

**அய்யா,**

**பொருள் :** தடையின்மைச் சான்று - தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி கிராமம் புல எண். 291/2B1-ல் 18125 சதுரமீட்டர் பரப்பு கொண்ட விவசாய உபயோக பகுதியில் இருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்வதற்கு தடையின்மைச் சான்று வழங்குவது - தொடர்பாக.

**பார்வை :**
1. தலைமைப் பொறியாளர், பொபது-நீஆது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் சுற்றறிக்கை எண்.189/க.பொ/முவஅ1/ கோ.3/நாள்.25.10.2016.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.H8G9JIV3(1639)-TD-4/ நாள். 25.06.2024.
3. உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து, காவிரி வடிநில உபகோட்டம் கும்பகோணம் அவர்களின் கடித எண்.604/ 2024/கோ.32-A/ நாள்.26.07.2024.

---

பார்வை 2-ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில் திரு.சம்பத் மற்றும் 3 நபர்கள், 27MD நகர், அம்மாசத்திரம், தாராசுரம், கும்பகோணம் என்பவருக்கு சொந்தமான தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி கிராமம் புல எண். 291/2B1-ல் 18125 சதுரமீட்டர் பரப்பு கொண்ட விவசாய உபயோக பகுதியில் இருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்வதற்கு இத்துறையின் தடையின்மைச் சான்று வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்குறிப்பிட்ட இடத்தினை உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து,. காவிரி வடிநில உபகோட்டம், கும்பகோணம் அவர்களால் தள ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன்படி நிலப்பயன் மாற்றம் செய்ய கோரும் நிலத்தின் அருகில் வடக்கு எல்லையில் அரசு நத்தம் மனையும், மேற்கு, கிழக்கு எல்லையில் தளமும் தெற்கு எல்லையில் அரசலாறு அமைந்துள்ளது எனவும் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் மட்ட அளவுகள் எடுக்கப்பட்டு கீழ்கண்டவாறு விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசலாறு நீரியியல் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. | வாய்க்கால் படுக்கை மட்ட அளவு **(BL)** | : (+) 26.740M |
| 2. | சாதாரண நீர் வழங்கும் அளவு **(NSL)** | : (+) 27.685M |
| 3. | அதிகபட்ச நீர் வழங்கும் அளவு **(MSL)** | : (+) 28.020M |
| 4. | இடதுகரை மட்ட அளவு **(LB)** | : (+) 29.740M |
| 5. | வலதுகரை மட்ட அளவு **(RB)** | : (+) 29.740M |

Scanned with CamScanner

6. சாலையின் மேல்மட்ட அளவு (RL) : (+) 29.540M

| வ. எண் | புல எண் | தளத்தின் தற்போதைய மட்ட அளவு | மனைப்பிரிவு அருகில் அமைந்துள்ள சாலையின் மேல்மட்ட அளவினை விட கூடுதலாக அதாவது (+) 29.540 + 0.45 = 29.990M | |
|---|---|---|---|---|
| | | | மட்ட அளவு | உயர்த்தப்பட வேண்டிய உயரம் (மீ) |
| 1 | 291/2B1 | (+) 28.440 | (+) 29.990 | 1.550 |

விண்ணப்பதாரின் வகைமாற்றம் கோரும் புலங்களின் அருகில் அமைந்துள்ள சாலையின் மேல் மட்ட அளவினை விட 0.45 மீட்டர் கூடுதலாக அதாவது (+) 29.990 உயரம் வரை கடின மண் கொண்டு நிரப்பும் பட்சத்தில் மனுதாரரின் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள இடம் வெள்ளக்காலங்களில் எந்தவித பாதிப்புக்குள்ளாகாது என பரிந்துரை செய்து பார்வையில் காணும் கடிதத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையிலும் உதவிசெயற்பொறியாளர், நீ.வ.து, காவிரி வடிநில உபகோட்டம், கும்பகோணம் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும் திரு.சம்பத் மற்றும் 3 நபர்கள், 27MD நகர், அம்மாசத்திரம், தாராசுரம், கும்பகோணம் என்பவருக்கு சொந்தமான தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி கிராமம் புல எண். 291/2B1-ல் 18125 சதுரமீட்டர் பரப்பு கொண்ட விவசாய உபயோக பகுதியில் இருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இத்துறையின் தடையில்லாச் சான்று வழங்கப்படுகிறது.

***நிபந்தனைகள்:***

1. விண்ணப்பதாரர் நிலம் வெள்ளகாலங்களில் நீரினால் பாதிக்கப்படாமலிருக்க 1.550 மீட்டர் உயரம் வரையில் அதாவது (+)29.990 மீட்டர் அளவிற்கு கடின மண்கொண்டு நிரப்பி அமைக்கப்படவேண்டும்.

2. மனைப்பிரிவு அமையவுள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க வண்ணம் வடிகால் அமைக்கப்பட வேண்டும்.

3. மனைப்பிரிவு அமையவுள்ள பகுதிகளில் திடக்கழிவுகள் குப்பை கூளங்கள் மற்றும் சாக்கடைநீர் ஆகியவற்றை அகற்ற தகுந்த உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு அமையவுள்ள பகுதிகளில் உள்ள நீர்வளத்துறையின் ஆறு, வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி நீர் தங்கு தடையின்றி செல்லுமாறு பராமரிக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவு அமையவுள்ள பகுதிகளில் உள்ள வாய்க்காலின் பரப்பளவு வருவாய் துறையின் "அ" பதிவேட்டின்படி பராமரிக்கப்படவேண்டும்.

6. நீர்வளத்துறை அலுவலர்கள் ஆறு மற்றும் வாய்க்காலினை பார்வையிட வரும்போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்க கூடாது.

Scanned with CamScanner

7. மனைப்பிரிவு அமையவுள்ள நிலப்பகுதியினை தவிர்த்து வேறு நிலப்பகுதிகளை இத்துறையின் முன் அனுமதியின்றி எக்காரணம் கொண்டும் பயன்படுத்தக்கூடாது.

8. மனுதாரர் மனைப்பிரிவு அமையவுள்ள நிலபகுதியினை ஒட்டியும் மற்றும் இடையிலும் வாய்க்கால் அமைந்து இருந்தால், மனுதாரர் இத்துறையின் அனுமதி பெறாமல் அணுகுபாலம் கட்டக்கூடாது.

9. மனுதாரர் மனைப்பிரிவு அமையவுள்ள இடத்தில் உள்ள அளவுகளை வருவாய்துறை மூலம் அளவீடு செய்து தனது சொந்த செலவில் எல்லை கற்கள் பதிக்கப்படவேண்டும்.

10. நீர்வளத்துறைக்கு சொந்தமான ஆற்றின் எல்லையில் இருந்து 3.00 மீட்டர் தூரத்திற்கு அப்பால் கட்டுமானங்கள் கட்டப்பட வேண்டும்.

11. மனைப்பிரிவு அமையவுள்ள இடத்தில் மனுதாரர் மூலம் கட்டப்படும் கட்டிட வடிவமைப்பு மற்றும் அதன் உறுதித் தன்மை குறித்து இத்துறை எந்தவிதத்திலும் பொறுப்பேற்க இயலாது.

12. மனைப்பிரிவு அமையவுள்ள பகுதியில் சொத்து சம்மந்தமான வழக்கு ஏதும் நிலுவையில் இருந்தாலோ, வேறு ஏதும் பிரச்சனைகள் ஏற்பட்டலோ இத்தடையின்மைச் சான்று அதற்கு பொருந்தாது என அறிவுறுத்தப்படுகிறது.

13. மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் ஏதேனும் மீறப்படுமானால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இத்துறையின் தடையில்லாச் சான்று ரத்து செய்யப்படும்.

ஓம்/....
செயற்பொறியாளர், நீ.வ.து
காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர்.

நகல் :- திரு.சம்பத் மற்றும் 3 நபர்கள், 27MD நகர், அம்மாசத்திரம், தாராசுரம், கும்பகோணம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

செயற்பொறியாளர், நீ.வ.து
காவிரி வடிநில கோட்டம், தஞ்சாவூர்.
02/08/24

Scanned with CamScanner



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate